ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1975/8 - 2016 ජූලි මස 11 වැනි සඳුදා - 2016.07.11

*1975/8 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச் சபையின் மாத்தறை நிலை IV நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ், நீர் உள்ளிழுப்புக் கிணறு மற்றும் பம்பும்இல்ல நிர்மாணித்தல் பொருட்டு காணிப் பிரிவொன்றை எடுத்துக் கொள்வதற்கு தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூலை 01.
5/2/2/ 1173

**அட்டவணை**

மாத்தறை மாவட்டத்தில் மாலிம்படை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் - 350 $^{A}$, கட்டுவன்கொடை கிராம அலுவலர் பிரிவின் மாலிம்படை கட்டுவன்கொடை எனும் ஊரில் அமைந்துள்ள ஹெட்டிகேவத்தை எனும் காணியில் குறித்துக் காட்டப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. சிந்தரத்ன ரங்கொடகே அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 31 ஆம் இலக்க வரைவில் துண்டு இலக்கம் $03^{C}$ மற்றும் $3^{d}$ எனக் காட்டப்படும் சுமார் 0.0846 ஹெக்டெயார் (34 பேர்ச்சஸ்) மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட இரு காணித்துண்டுகள்:-

1. துண்டு இல. $3^{C}$- விஸ்தீரணம் : 0.0814 ஹெக்டெயார் (32.20 பேர்ச்சஸ்) மட்டும்.

வடக்கு : வீடுகளிலிருந்து பிரதான வீதி வரையுள்ள பிரதேச சபை வீதி மற்றும் அக்காணியின் துண்டு இல. 2 உடைய துண்டு (திட்ட இல. 1410) ;

கிழக்கு : இக்காணியின் துண்டு இல. 4 இனை உடைய துண்டு (திட்ட இல. 1410) ;

தெற்கு : இக்காணியின் துண்டு இல. 4 இனை உடைய துண்டு (திட்ட இல. 1410) ;

மேற்கு : இக்காணியின் துண்டு இல. 2 இனை உடைய துண்டு (திட்ட இல. 1410).

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திரு. கே. கே. நிலந்த லக்மால்,
பெலவத்தை, கித்தலகம கிழக்கு III,
திஹகொடை.

*2. துண்டு இல. 3ᵈ- விஸ்தீரணம் : 0.0032 ஹெக்டெயார் (1.29 பேர்ச்சஸ்) மட்டும்.*

வடக்கு : இக்காணியின் துண்டு இல. 3ᶜ இனை உடைய துண்டு ;

கிழக்கு : இக்காணியின் துண்டு இல. 4 இனை உடைய துண்டு (திட்ட இல. 1410) ;

தெற்கு : இக்காணியின் துண்டு இல. 4 இனை உடைய துண்டு (திட்ட இல. 1410) மற்றும் வீடுகளிலிருந்து பிரதான வீதி வரையுள்ள பாதை ;

மேற்கு : வீடுகளிலிருந்து பிரதான வீதி வரையுள்ள பாதை.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திரு. கே. கே. நிலந்த லக்மால்,
பெலவத்தை, கித்தலகம கிழக்கு III,
திஹகொடை.

07 - 981

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச் சபையின் கோணகலை மெதகொடை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறு மற்றும் உந்தும் நிலையத்தினை நிர்மாணித்தல் பொருட்டு காணிப் பிரிவொன்றை எடுத்துக்கொள்வதற்கு தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, யூலை 01.
5/2/1/ 1183

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில் ருவன்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவில், மெதகொடை - 103 கிராம அலுவலர் பிரிவின் மெதகொடை எனும் ஊரில் அமைந்துள்ள இலுவேவெலைவத்தை எனும் காணியில் குறித்துக் காட்டப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. ஜீ. எம். கே. தென்னகோன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள KE/ 2012/01 ஆம் இலக்க வரைவில் குறித்துக்காட்டப்படும் மொத்த பிரமாணத்திலிருந்து 12.6 பேர்ச்சஸ் வரையான பின்வரும் எல்லைகளில் அமையப்பெற்ற காணித்துண்டு :-

வடக்கு : இக்காணியின் மீதித்துண்டு ;

கிழக்கு : களனி கங்கை ;

தெற்கு : திரு. டபிள்யூ. ஏ. ரஞ்சித் அவர்கள் உரிமைகோரும் காணி ;

மேற்கு : பிரதான வீதியிலிருந்து மீதிரிகலவிற்கான பாதை.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திரு. டபிள்யூ. எம். டீ. நிஹால் விஜேமான்ன,
மெதகொடை,
அமிதிரிகலை.

07 - 982

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.